**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 8 ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண். 22 /2019**

வாதி தரப்பு சாட்சியாக PW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முத்துலெட்சுமி | Husbund Name | : | காத்தலிங்கம் |
| Village | : | சித்தன்வாழூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | | Age | : | 56 |

**முதல் விசாரணை தொடர்ச்சி** -

நான் இவ்வழக்கின் வாதியாவேன். கடந்த 24.04.1979 ம் தேதியில் ஜானகியம்மாள் என்பவரிடமிருந்து எனது தந்தை முனிசாமி கிரயம் பெற்றதற்கான கிரய பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1 ஆகவும்**, 2019ல் எனது தந்தை முனிசாமி பேரில் பதிவான பட்டாவிற்கான கணினி நகல் **வா.சா.ஆ. 2 ஆகவும்,** கடந்த 20.02.2009ம் தேதியிட்ட எனது அப்பா முனிசாமி இறந்துபோனதற்கான இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ. 3 ஆகவும்,** இறந்துபோன எனது அப்பா முனிசாமிக்கு வாரிசு வாதிகளாகிய நாங்கள்தான் என்பதற்கான வாரிசு சான்றிதழின் நகலை தாக்கல் செய்கிறேன். கடந்த 11.08.2019ல் தேதியில் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகலை தாக்கல் செய்கிறேன். கடந்த 23.09.2019ம் தேதியில் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கொடுத்த புகார் மனுவின் நகலை தாக்கல் செய்கிறேன். 23.09.2019ம் தேதியில் மாவட்ட கண்காணிப்பாளர் அவருக்கு கொடுத்த புகார் மனுவின் நகலை தாக்கல் செய்கிறேன். கடந்த 19.08.2019ம் தேதியில் பிரதிவாதிகள் பெயரில் தாக்கல் செய்துள்ள கேவியட் மனுவின் அலுவலக நகல் **வா.சா.ஆ. 4 ஆகவும்**, மேற்படி கேவியட் மனுவினை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ. 5 ஆகவும்**, மேற்படி

கேவியட் மனு 2ம் பிரதிவாதிக்கு அனுப்பி திருப்பப்பட்டதற்கான அஞ்சல் உறை **வா.சா.ஆ. 6 ஆகவும்**, கடந்த 26.08.2019 தேதியில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த கேவியட் மனுவின் சார்வு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ. 7 ஆகவும், கடந்த 19.08.2019ம்** தேதியில் வாதிகள் தரப்பில் பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ. 8 ஆகவும்**, 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு திரும்ப வந்ததற்கான அஞ்சல் உறை **வா.சா.ஆ. 9 ஆகவும்**, கடந்த 24.09.2019ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி தங்கள் வழக்கறிஞர் மூலமாக வாதிகளுக்கு கொடுத்த பதில் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ. 10 ஆகவும்**, 1 முதல் 3 வரையுள்ள வாதிகளின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.சா.ஆ. 11 முதல் 13 ஆகவும்**, கடந்த 28.08.2019ம் தேதியிட்ட வலங்கைமான் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட வழிகாட்டு மதிப்பு சான்றிதழ் **வா.சா.ஆ. 14 ஆகவும்**, கடந்த 30.09.2019ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான வாதிகளின் பெயரில் பதிவான கணினி பட்டா நகல் (எண்ணிக்கை 2) **வா.சா.ஆ. 15 ஆகவும்**, எனது சகோதரி இறந்ததற்கான 23.05.2006ம் தேதியிட்ட இறப்பு சான்றிதழ் நகலினை தாக்கல் செய்கிறேன். தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.07.08 18:41:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.